நெஞ்சிற்கினிய "சுதந்திரத் திருநாளில்" நினைவுகூர வேண்டிய தலைவர் "கலைஞர்"

இந்திய சுதந்திரம் என்றாலே போதும்...
இதயத்தில் மகிழ்ச்சி அலைகள் மோதும்...
சிந்திய ரத்தம் கொஞ்ச நஞ்சமல்ல...
சிறைச்சாலைக் கொடுமை ஒன்றி ரண்டல்ல...

காந்தி... ஜவகர்... பாரதி... வ.உ.சி...
காமராஜர் கக்கன் திருப்பூர் குமரரென
ஏந்திய சுதந்திர வேள்வித் தீயில்
நீந்தியே உயிர்நீத்த தியாகச் செம்மல்கள்...

அவர்களைப் போற்றுகிற பொன்நாளாம் இந்நாளில்
அருமைமிகு கலைஞரையும் நினைத்துப் பார்க்கின்றேன்...
குவலயமே போற்றிக் கொண்டாடும் வகையிலே - உரிமை
கொண்டுவந்து கொடுத்திட்டார் கலைஞர் நம் கைகளிலே...

குடியரசுத் திருநாளில் ஆளுநர் வருகை தந்து
கொடியேற்றல் போலே... மாநில முதல்வர்களும்
கொடியேற்ற வேண்டும்... சுதந்திரத் திருநாளில்... என
கோரிக்கை வைத்துச் சாதித்தார் "கலைஞர்"

நல்லவேளை அப்போது "இந்திரா" பிரதமர்
நாற்காலியில் இருந்ததால் சாத்திய மாயிற்று...
உள்ளமெலாம் மகிழுகின்ற கலைஞரின் கோரிக்கை
உவகையுடன் வெற்றி பெற்று சாதனை யாயிற்று...

இந்தியத் திருநாட்டின் மாநில முதல்வர்களே - இதனை
என்றென்றும் நன்றியுடன் நெஞ்சிலே நிறுத்துங்கள்... ! மக்கள்
சிந்தனைக்குத் தருகின்ற சிறுதுளி சேதி இது - இதுபோல்
சிறப்பான சாதனைகள் கலைஞரிடம் ஏராளம்!

கவிஞர்
இரவி பாரதி

ரஷியாவில் வெள்ளம்!

மாஸ்கோ, ஆக.15 -

ரஷியாவின் கிழக்கில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷியாவின் கிழக்குப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. முன்னதாக இந்த வாரத்தின் தொடக்கத்தில் கனூன் புயல் ஜப்பானுக்கு கனமழையை கொடுத்தது. பின்னர், அந்த புயல் கொரிய தீபகற்பம் நோக்கி நகர்ந்தது. ரஷியாவின் கிழக்கு பகுதியில் கனமழை பெய்து வருகிறது. கனமழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் 405 குழந்தைகள் உள்பட 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றபட்டனர்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நேற்று (14.08.2023) சென்னை, முகாம் அலுவலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, பொதுப்பணித் துறையில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையினை வழங்கினார்கள். இந்நிகழ்வில் முதன்மை தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 2,374 வாக்குச்சாவடிகளிலும்

வாக்குச்சாவடி வாரியாக தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கூட்டம் கூட்டிட வேண்டும்!

மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதி மூலம் எற்பாடு என அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம்,ஆக.15-

வருகிற 2024 நாடாளுமன்றத் தேர்தலை சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள 2,374 வாக்குச்சாவடிகளிலும் மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் மூலம் வாக்குச்சாவடி வாரியாக தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டிடுவது என பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர பொது உறுப்பினர்கள் கூட்டம் திருப்போரூர் வடக்கு ஒன்றியம், மாம்பாக்கம் மேடவாக்கம் சாலையில் அமைந்துள்ள விக்னேஷ் மகால் மாவட்ட கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், செங்கை மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், த.ஜெயகுமார், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தே மாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், டி.பாபு, எம்.கே.டி.கார்த்திக், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், ஆர்.எஸ்.சங்கர், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ்,கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், ம.கணேஷ்பாபு, செ.அருள்தேவி, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, தொ.மு.ச.பேரவைச் செயலாளர் பொன்னுராம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமல கண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, என்.கனகராஜ், பா.ஞானப்பிரகாசம், ஜெயராம் மார்த்தாண்டன், தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், ஜா.செந்தில்தேவராஜ், த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், ஜி.தாம்பரம் நாராயணன், ஆர்.கே.சையத்யூசூப், பொன்.ரமேஷ்கவி, டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், ஜான் தினகரன், சி.பரிமளா, உதயா கருணாகரன், சசிகலா, தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு, தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

வருகிற 21.9.2023 அன்று காலை 10.00 மணியளவில் திருப்போரூர் தெற்கு ஒன்றியம், நெம்மேலியில் ரூ.4,276 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் 400 MLT அளவு கொண்ட 3வது அலகினை மாண்புமிகு தமிழக முதல்வர் அன்புத் தலைவர் தளபதி அவர்கள் அடிக்கல் நாட்டி வைக்கும் மாபெரும் விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள் அனைவரும் அணி திரண்டு வந்து பங்கேற்பது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டும், தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் நல்லாட்சி நடத்தி, இந்தியாவின் No.1 முதல்வர் என்ற வரலாற்று சாதனையை படைத்து, ஈராண்டு ஆட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி, சாதனைகளை படைத்த சரித்திரத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் நலன் காக்கும் கழக அரசின் சாதனைகளை விளக்கியும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் கீழ்கண்ட விவரப்படி திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள் 292023, 392023, 992023, 1092023 ஆகிய 4 தேதிகளில் நடைபெற உள்ளன என்றும், தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் வரை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்ச்சியாக நடைபெற உள்ளன என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஏகமனதாக தீர்மானிக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகங்களின் சார்பில் முத்தமிழ் கலைஞர் திருஉருவச் சிலைகளை அமைப்பதற்காக அரசின் விதிமுறைகளை பின்பற்றி அனுமதி பெற்று அமைப்பது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

வருகிற 2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலை சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காக நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதியில் அடங்கி உள்ள பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் மொத்தம் உள்ள 2374 வாக்குச்சாவடிகளிலும், வாக்குச்சாவடி வாரியாக பூத் கமிட்டி கூட்டத்தை கூட்டி கழகத் தோழர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரையும் ஒருங்கிணைந்து நாடாளுமன்றத் தேர்தல் பணியை மும்முரமாக ஈடுபடச் செய்வது என்றும் இக்கூட்டத்தை சிறப்புற நடத்துவதற்காக மாவட்டக் கழகத்தின் சார்பில் 30 பூத்துகளுக்கும் ஒரு பிரதிநிதி அனுப்புவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஏகமனதாக முடிவெடுக்கிறது.

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நாளையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டிற்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்காகவும் ஆற்றிய பெரும் பணிகளையும், அளவிலா சாதனைகளையும் நினைவு கூறும் வகையில் மாபெரும் கருத்தரங்கம் நடத்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஏகமனதாக முடிவெடுக்கிறது.

வரலாற்றுப் பெருமை வாய்ந்த காஞ்சிபுரம் மண்ணில் பிறந்து தனது அடுக்கு மொழி பேச்சாற்றலாலும் எழுத்தாற்றலாலும் அறிவாற்றலாலும் தமிழக மக்களை கவர்ந்த மாபெரும் அரசியல் தலைவர் நம்மை எல்லாம் ஆளாக்கிய "காஞ்சி தந்த காவியத் தலைவன்,"தென்னாட்டு காந்தி,"இந்நாட்டு இங்கர்சால், என்று அனைவராலும் போற்றி புகழப்படும் அரசியல் மாமேதை, எந்நாளும் பொது வாழ்வில் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று உறுதியோடு இறுதி நாள் வரை வாழ்ந்து மறைந்தும் மறையாமல் நம் இதயங்களில் வாழ்கின்ற காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15ஆம் தேதியன்று காலை 9.00 மணிக்கெல்லாம்,

நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் கிளை வார்டுகளில் உள்ளஅனைத்து கழகக் கொடிக் கம்பங்களிலும் கழக கொடியேற்றியும் அதன்அருகே அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்தினை அலங்கரித்து வைத்தும், சக்கரை பொங்கல் இனிப்பு வழங்கியும் வழக்கம் போல மிகவும் எழுச்சியுடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் மிகச்சிறப்பான முறையில் கொண்டாடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

தந்தை பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக கனடபிடிக்க வேண்டும் என்றும் அத்துடன் உறுதி மொழியும் ஏற்றிட வேண்டும், நம்முடைய முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் அறிவித்துள்ளபடி, தந்தை பெரியார் 145வது பிறந்த நாளான செப்டம்பர் 17ஆம் தேதி அன்று காலை 9.00 மணியளவில்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் கிளை வார்டுகளில் உள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கும், ஆங்காங்கு தந்தை பெரியார் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தி சமூக நீதிநாளாக கடைபிடித்து கழகத்தினர் அனவைரும் உறுதி மொழி ஏற்று தந்தை பெரியாருக்கு பெருமை சேர்ப்பது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.

எப்போதும் இல்லாத அளவிற்கு

தமிழ்நாடெங்கும் திருக்கோவில் குடமுழுக்கு!

முதல்வருக்கு பூசாரி சங்கத் தலைவர் புகழாரம்!

சேலம், ஆக. 15 -

தமிழ்நாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருக்கோவில் குடமுழுக்கு வைபவங்கள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன என்று கோவில் பூசாரிகள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.வாசு பூசாரி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பி.வாசு பூசாரி மேலும் கூறியதாவது:

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து பிறகு ஆண்டுக்கு 2500 திருக்கோவில்களுக்கு தலா ரூ.2 லட்சம் திருப்பணி நிதி இந்து சமய அறநிலையத் துறை மூலம் வழங்கப்பட்டு அந்த திருக்கோவில்கள் அனைத்திலும் திருப்பணிகள் நடைபெறுகின்றன.

பல்லாண்டுகளாக குடமுழுக்கு நடைபெறாமல் இருந்த பல திருக்கோவில்களுக்கு அசுர வேகத்தில் குடமுழுக்கு வைபவங்கள் நடைபெற்று வருகின்றன. குடமுழுக்கு நடைபெறுவதில் காலதாமதம் ஏற்படக் கூடாது என்பதற்காக இந்து சமய அறநிலையத் துறை தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் அனுமதி வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆன்மீக அரசாட்சியில் திருக்கோவில்கள் அனைத்தும் புத்துயிர் பெற்று வருகின்றன என்று பி.வாசு பூசாரி குறிப்பிட்டார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.சேகர்பாபு அவர்களை சென்னையில் அவரது இல்லத்தில் நேற்று (திங்கள்கிழமை -14.8.2023) சங்கத் தலைவர் பி.வாசு சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். அப்போது மாநிலப் பொருளாளர் கே.சுந்தரம், சங்க மாத இதழ் ஆசிரியர் த.புருஷோத்தமன் உடன் இருந்தனர்.

காணொலி காட்சி வாயிலாக தி.மு.க. பொறியாளர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

பொறியாளர் அணிச் செயலாளர் கு. கருணாநிதி அறிவிப்பு

தி.மு.க. பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் இன்று (15.8.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில், கழக பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன் தலைமையில், இணைச் செயலாளர் அ.வெற்றிஅழகன் மற்றும் துணைச் செயலாளர்கள் கு.சண்முகசுந்தரம், எம்.பி. வே.உமா காந்த், இரா.நரேந்திரன், சி.பிரதீப், இரா.ப.பரமேசுகுமார் ஆகியோர் முன்னிலையில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக பொறியாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இக்கூட்டத்திற்கான காணொலி காட்சிக்கான தொடர்பு (Link) தங்கள் அலைபேசி எண்ணுக்கு அனுப்பப்படும்.

பொருள்: 1. தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி,

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி

"கல்லூரிகளில் நடத்தப்படும் நிகழ்வுகளான கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் "தமிழகம் முழுவதும் நடத்துவது - குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.8.2023

கு.கருணாநிதி
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

மண்டலம் 8, 9, 10, 11-க்குட்பட்ட பகுதிகளுக்கு

குழாய் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் ஒருநாள் நிறுத்தம்!

சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, ஆக.15-

கோயம்பேடு காளியம்மன் கோயில் தெருவில் 900 மி.மீ விட்டமுடைய குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுவதால் 16.08.2023 அன்று மாலை 07.00 மணி முதல் 17.08.2023 மாலை 07.00 மணி வரை மண்டலம்-8, 9, 10 மற்றும் 11க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படுகிறது.

இது குறித்து சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

கோயம்பேடு காளியம்மன் கோயில் தெருவில் 900 மி.மீ விட்டமுடைய குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் ஐயப்பன் நகர் 1வது தெரு சந்திப்பு முதல் சாய் நகர் இணைப்பு சாலை வரை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக 16.08.2023 அன்று மாலை 07.00 மணி முதல் 17.08.2023 மாலை 07.00 மணி வரை மண்டலம்-8 (அண்ணா நகர்), மண்டலம் 9 (தேனாம்பேட்டை), மண்டலம் 10 (கோடம்பாக்கம்) மற்றும் மண்டலம் 11 (வளசரவாக்கம்)க்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம்8 (அண்ணா நகர்)- எம்.எம்.டி.ஏ காலனி, அமைந்தகரை, அரும்பாக்கம்,

மண்டலம்9 (தேனாம்பேட்டை- சூளைமேடு, நுங்கம்பாக்கம் (பகுதி), தியாகராயநகர் (பகுதி), தேனாம்பேட்டை(பகுதி)

மண்டலம்10 (கோடம்பாக்கம்) - கோயம்பேடு, விருகம்பாக்கம், சாலிகிராமம், வடபழனி, கே.கே.நகர், அசோக் நகர், மேற்கு மாம்பலம், கோடம்பாக்கம், தியாகராய நகர் (பகுதி), சி.ஐ.டி.நகர்.

மண்டலம்11 (வளசரவாக்கம்)- தாய்சா அடுக்கு மாடி வளாகம்

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிகுட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் 6வது மாநில நிதிக்குழு மானியம் 2023-24 (நிலுவை தொகை) கீழ் 10கிமீ தூரம் உள்ளடக்கிய 32 சேதமடைந்த சாலைகளை சீரமைப்பதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஒப்பந்தங்கள் அளித்து பணி உத்தரவு வழங்கப்பட்டது அதனைதொடர்ந்து முன்னாள் அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பணிகளை துவக்கி வைத்தார் அருகில் ஆவடி மாநகர ஆணையர் க.தர்ப்பகராஜ், ஆவடி பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர் பேபிசேகர், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயணபிரசாத், பொன்விஜயன், மற்றும் அரசு அதிகாரிகள் கவுன்சிலர்கள் வட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.